# செல்வச்சுடர்....



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கஜானனம் பூதகணாதி ஸேவிதம்
கபித்த ஜம்பு பலஸார பட்ஜிதம்
உமாசுதம் சோக விநாச காரணம்
நவாமி விக்னேஸ்வர பாத பங்கஜம்

யாழ்ப்பாணம் அல்வாய் தெற்கைப் பிறப்பிடமாகவும்,
கிளிநொச்சி வட்டக்கச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும்
கொண்ட

அமரர்

# செல்லையா செல்வரத்தினம்

அவர்களின் சிவபதப் பேறுகுறித்த
31ம் நாள் நினைவு மலர்

## 11.06.2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அல்வாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்டு 12. 05.2018 இல் இறைவனடி சேர்ந்த செல்லையா செல்வரத்தினம் அவர்களின் நினைவாக இம் மலர் வெளியிடப்படுகின்றது. நித்திய சாந்தி பெற வேண்டுமெனப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

**ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!**

**குடும்பத்தினர்**



## கண்ணீர்ப் படையல்

அன்பும் அறனும் பண்பும் காட்டி
பண்புடை ஒழுக்கம் பயனுறச் செப்பி
இன்புடை வாழ்வு வளம் பெறவே – தினம்
இனிய அறிவுரை ஏற்றிடச் செப்பி
ஓராயிரமாய் மாணவர் சூழ
ஆறாத் துயரில் ஆழ்த்தியே சென்றீர்
பெய்யெனப் பெய்யும் மழையாய் வாழ்ந்த
பெருமகள் இணையடி சிறுமலர் வைத்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்”



மண் மகிழ
11
01
1932

கண்நெகிழ
12
05
2018

அமரர்

# செல்லையா செல்வரத்தினம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

## திதிவெண்பா

விளம்பி வருடத்து சித்திரைத் திங்களிலே
வளமார் அமரபக்கத் திரயோதசியே – நீண்டபுகழ்
செல்வரத்தினப் பெருமாட்டி ஈசன் தாள்
செல்லத் துணிந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்





## விநாயகர் துதி

விநாயகனை வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒரு குலமும் சுற்றமும் ஓரூரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாயென் நெஞ்சந்துறப்பிப்பாய் நீ
இப்பொன் நீ இம்மணி நீ இம்முத்தும் நீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வன் நீயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கி
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

நையாத மனத்தினை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோகியசுந்தரனே.

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று
விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யார்க்கு வழிவழியானாய்
மணஞ் செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடி எம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போது உன்னடியின்
கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சற்குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வளாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறையரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

## தேற்றம்

பிறவாதிருக்க வரம் தரல் வேண்டும் பிறந்து விட்டால்
இறவாதிருக்க மருந்துண்டு காண் இது எப்படியோ அறமார்
புகழ்தில்லை அம்பலவாணர் அடிக்கமலம்
மறவாதிருமனமே அது காண் நல் மருந்துனக்கே

(பட்டினத்தார் பாடல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சகலகலா வல்லிமாலை

திருச்சிற்றம்பலம்

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளை யுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோசக மேழுமளித்
துண்டானுறங்க வொழித்தான் பித்தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவை கொள் கரும்பேசகல கலா வல்லியே

நாடும் பொருட் சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியில் பணித்தருள் வாய் பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற் கொடியே கனதனக் குன்றுமைம் பாற்
காடும் சுமக்குங் கரும்பே சகல கலா வல்லியே

அளிக்கும் செழுந்தமிழ் தெள்ளமு தார்ந்துன் னருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டு
தெள்ளித் தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்
கண்டுகளிக்குங் கலாப மயிலே சகல கலா வல்லியே

தூக்கும் பனுவற் றுறை தோய்த்த கல்வியுஞ் சொற் சுவை தோய்
வாக்கும் பெருகப்பணித் தருள் வாய் வட நூற் கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர் செந்
நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலா வல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சத் தடத்தல ராத தென் னேநெடுந் தாட் கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன் செந் நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலா வல்லியே

பண்ணும் பரதமும் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய் சகல கலா வல்லியே

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கனல் காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ் தீம்பா லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோதிமப் பேடே சகல கலா வல்லியே.

சொல்விற் பனமு மவதான முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமை கொள் வாய் நளினாசனஞ் சேர்
செல்விக்கரி தென் றொரு கால முஞ்சிதை யாமை நல்குங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே சகல கலா வல்லியே.

சொற்கும் பொருட்கு முயிரா மெய்ஞ் ஞானத்தின்
தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார் நிலத் தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாண நடை
கற்கும் பதாம்புயத் தாளே சகல கலா வல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரு மென்
பண்கண் டளவிற் பணியச் செய் வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும் விளம்பிலுன் போற்
கண்கண்ட தெய்வமுளதோ சகல கலா வல்லியே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரத்துவமடைந்த இளைப்பாறிய ஆசிரியர் திருமதி செல்லையா செல்வரத்தினம் அவர்களின் வாழ்க்கை வரலாறு

கல்வி, கலை, கலாசாரம், மற்றும் விருந்தோம்பல் ஆகிய தமிழர் தம் விழுமியங்களில் சிறந்து விளங்கும் யாழ்ப்பாண மாவட்டத்தின் புகழ்பூத்த வேலிலந்தை முத்துமாரியம்மன் குடி கொண்டிருக்கும் அல்வாய் என்னும் புண்ணிய பூமியிலே உயர் வேளாளர் குலத் தோன்றல் கதிரித்தம்பி நல்லதம்பிக்கும், சின்னாச்சிக்கும் கடைசிப் புத்திரியாக 11.01.1932 இல் இப்பூவுலகில் அவதரித்தார். இவருடன் கூடவே பிறந்த சகோதரர்களாக பாக்கியம், சின்னத்துரை, செல்லம்மா, சின்னம்மா, செல்லத்துரை, சரஸ்வதி ஆகியோர் இவர்களுள் சரஸ்வதியைத் தவிர மற்ற அனைவரும் இறைபதம் அடைந்து விட்டனர்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை அல்வாய் தெற்கு மெதடிஸ்த மிஷன் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை அல்வாய் காராவளவு தமிழ்க் கலவன் பாடசாலையில் S.S.C வரை பயின்று சித்தியடைந்தார். பின் ஆங்கிலக் கல்வியை வட இந்து மகளிர் கல்லூரியில் கற்றார்.

இவர் தனது ஆசிரியப் பணியை கண்டி உடுவை சிங்கள, தமிழ்க்கலவன் பாடசாலையிலும் கல்வி கற்பித்து அதன் பின் யாழ்ப்பாணம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் பணிபுரிந்து அதன் பின்னர் யாழ். திருநெல்வேலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் பயின்று பட்டம் பெற்றார். அதன் பின் 1964 இல் திருமணபந்தத்தில் இணைந்து கொண்டார். அதன் பின்னர் கிளி/இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் ஆசிரியராக, உதவி அதிபராக, அதிபராக 26 ஆண்டுகள் கல்விப் பணியை ஆற்றி 11.01.1990 இல் தனது 58 ஆவது அகவையில் ஓய்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றார். இவர் தன் பணியினூடாக பல கல்விமான்களை உருவாக்கிய பெருமையும் இவருடையதே. இவர் யாழ் கோப்பாய் உயர் வேளாள குலத்தோன்றலான கதிரிப்பிள்ளை பொன்னாச்சிபிள்ளை தம்பதிகளின் ஏக புதல்வனான செல்லையா ஆசிரியர் என்பவரை 1964 இல் திருமணம் செய்து மணவாழ்வில் இணைந்தார். இவர்களின் இல்லற வாழ்வின் பயனாக லலிதாம்பிகை, ஜெகதாம்பிகை, குகதாம்பிகை, அம்பிகைதாசன் என்னும் நான்கு புத்திரச் செல்வங்களையும் பெற்றெடுத்து மகிழ்வுடன் வாழ்ந்து கொண்டிருந்தனர்.

மூத்த மகளான லலிதாம்பிகையை யாழ். அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், மல்லாவியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம் செல்லம்மா தம்பதிகளின் புத்திரன் விக்கினேஸ்வரனுக்கு திருமணம் செய்து வைத்தனர் அவர்கள் மதுஷாலினி, நிவேதிகா, சிவானுயன், தாரணி ஆகிய பிள்ளைகளுடன் மல்லாவியில் வசித்து வருகின்றனர்.

இளைய மகளான ஜெகதாம்பிகை(ஆசிரியர்) வற்றாப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட முதலியார் உடையார் பரம்பரையைச் சேர்ந்த இராசநாயகம் முத்தம்மா தம்பதிகளின் மகனான சேதுகாவலர் (கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்க செயலாளர் முல்லைத்தீவு) என்பவரைத் திருமணம் செய்து மகிஜா எனும் பிள்ளையோடு வட்டக்கச்சியில் வசித்து வருகின்றனர்.

கனிஷ்ட மகளான குகதாம்பிகை யாழ் வல்வெட்டியைச் சேர்ந்த சண்முகலிங்கம் அன்னலட்சுமி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வன் கிருஷ்ணலிங்கம் என்பவரைத் திருமணம் செய்து பிரவீனா, அனோச்சனா, அஸ்வின், அரவின் ஆகிய பிள்ளைகளுடன் சுவிஸ் நாட்டில் வாழ்ந்து வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின் ஏக புத்திரனான அம்பிகைதாசன் மட்டக்களப்பு சரவணமுத்து - நாவரசு தம்பதியினரின் கனிஷ்ட மகளான பேரின்ப நாயகியைத் திருமணம் செய்து தமிழினி என்ற பெண் பிள்ளையுடன் மட்டக்களப்பிலே வசித்து வருகின்றனர்.

இவர் தனது சிறுவயது முதல் சமூக சேவையிலும், ஆலயங்களின் வளர்ச்சிக்கும், பாடசாலையின் வளர்ச்சிக்கும், தன்னிடம் உதவி நாடி வருபவர்களுக்கு இல்லை என்று கூறாமல் வாரி வழங்கும் வள்ளலாகவும், குடும்பத்திற்கு ஒரு நல்ல மனைவியாகவும், சமூகத்துக்கு அறிவுரை கூறும் அறிவாளியாகவும், ஒரு நல்லாசானாகவும், நல்லதோர் அன்னையாக, நல்ல மாமியாக, குழந்தைகளின் உள்ளத்திலே நல்ல ஒரு பேத்தியாகவும் வாழ்ந்து காட்டிய ஒரு ஒளி விளக்கு.

இவ்வாறாக மக்கள் மத்தியில் எல்லோரினதும் மனங்களிலும் இடம்பிடித்துக் கொண்டிருந்த இவர் தன் இறுதிக் காலத்தில் நோய்வாய்ப்பட்டு இறைவனின் விருப்பப்படி விளம்பி வருடம் வைகாசித்திங்கள் 12 ம் நாள் 12.05.2018 இரவு 11.30 மணியளவில் அபரபட்ச திரயோதசியில் இறைபதம் அடைந்தார்.

**அன்னாரின் ஆத்மா சாந்திக்காக அனைவரும் பிரார்த்திப்போமாக**

**சுபம்**

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடசாலை நிகழ்வின் போது அமரரான செல்லையா செல்வரத்தினம் ஈகச்சுடர் ஏற்றும்போது.....




திருமண நிகழ்வின் போது.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது அன்புள்ள தங்கைக்கு........

மாதமொன்று ஆன போதும்
மறக்க முடியவில்லையே ஆசைத் தங்கையே!
ஐயோ! எங்கு சென்றாயோ ஆருயிர் தங்கையே!
கனிந்த உன் பூ முகமும்
கண் கொள்ளாய் புன்னகையும் கண்ணூறு பட்டதுவோ?
காலனையும் கவர்ந்ததுவோ?
தவமின்றிக் கிடைத்த வரம் நீ - எமை
தனியாக தவிக்க விட்டுச் சென்றதேனோ?
இனி என்னை யார் ஆசை அக்கா என்று அழைப்பாரோ?
நான் அறிகுயன் என் ஆசைத் தங்கையே!
ஆனந்தமாய்க் கூடிக்குலாவி இருந்த எனது சகோதரர்கள்
எல்லோரும் என்னை தனிமரமாக
தவிக்க விட்டு சென்று விட்டீர்களா?
நினைவில் தினமும் வருகின்றாய்
கனவில் வந்து கதை பேசுகின்றாய் - இந்த
அக்காவின் கண்ணீரை வந்து
துடைப்பாயா.......?
மாதமொன்று ஆனாலும் மறையாது
உந்தன் மதிமுகம் .....!!!



**அன்பின் ஆசை அக்கா**
**சரஸ்வதி தம்பிப்பிள்ளை**
**(ஓய்வு பெற்ற ஆசிரியர்)**
**வல்வெட்டி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அருமை அன்ரி

நாங்கள் இருவரும் ஒரே வீட்டில் வளர்ந்தோம் அன்ரி எனக்குத் தலைவாரி தயார்ப்படுத்தி உங்கள் அரவணைப்பிலே பாடசாலைக்குக் கூட்டிச் சென்றீர்கள். இருவரும் ஒன்றாகவே பாடசாலை சென்று வந்தோம். இவற்றை நினைக்கும் போது என் கண்கள் குளமாகின்றன. அன்ரி சற்று கடந்த காலத்தை நினைத்துப் பார்க்கின்றேன். அல்வாய் அம்மன் திருவிழா என்றால் உங்கள் சகோதரர்கள் அனைவரும் எங்கள் வீட்டில் ஒன்று கூடியிருப்பீர்களே. பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமா? என்ற வாக்கியத்திற்கு இணங்க என்ன குதூகலம் என்ன சந்தோசம் தடல்புடலான சமையல் தான் என்ன, ஒரே அமர்க்களம் தான் இவையெல்லாம் அன்று ஆனால் இன்று எல்லாமே கானல் நீராகி கவலைதான் மிகுதியாயிற்றே.

பெரியபிள்ளை நான் வருவேன் என்றால் வழி மேல் விழி வைத்து பார்த்திருப்பீர்களே அன்ரி இவற்றை நினைக்கும் போது நெஞ்சம் புண்ணாகின்றது. அன்ரி உனக்குப் பிரயாணம் அதிகமாகி விட்டது. பிரயாணத்தைக் குறைத்துக் கொள்ள என்று என்மேல் பரிதாபப்படுவீர்களே. நீங்கள் பெற்ற பிள்ளை போலவே என்னில் அக்கறையாக இருந்தீர்கள் அதுமட்டுமல்ல எனது மகள் உங்கள் பேரனின் குடும்பத்திற்கும் உதவி செய்தீர்களே. எங்கள் இருவருக்கும் ஆண்பிள்ளையின் சோகம் தான் எங்கள் கவலைகளை நாங்கள் இருவருமே பகிர்ந்து கொள்வோம். ஆறுதலாக இருக்கும். பார்க்கும் இடம் எல்லாம் உங்கள் உருவமே தோன்றி வதைக்கின்றது. கேட்கும் ஒலியெல்லாம் உங்கள் பகுடி ஒலியாகவே (ஒலிக்கின்றது உங்கள் பெயருக்கு ஏற்ப செல்லமாகவே) வாழ்ந்து வாழ்க்கையிலே ஜெயித்து விட்டீர்கள் உங்கள் விருப்பப்படியே இறுதி மூச்சைப் புதிய வீட்டிலேயே விட்டீர்கள். எம்மால் உங்கள் நினைவை மறக்க முடியுமா? இல்லை நீங்கள் செய்த உதவிகளைத்தான் மறப்போமா? நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும் அன்ரி ஆத்மா சாந்திக்கு இறைவனை வேண்டுகின்றேன்.

**உங்கள் நினைவால் வாடும்**
**பெரியபிள்ளை நாகரத்தினம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதருள் மாணிக்கமான ஆசிரியை

ஆசிரியத் தொழில் புனிதமானது. அத் தொழிலின் தகைமை அறிந்த எங்களூர் செல்வரத்தினம் ஆசிரியை மூன்று தலைமுறைக்கும் மேலாக கல்விப்பணி ஆற்றிய பெருந்தகை. மனிதருள் மாணிக்கமாக விளங்கும் மாணவர்கள் பலரை உருவாக்கி அகமிக மகிழ்ந்தவர்.

நல்ல பண்பு, நல்ல உள்ளம், கனிவானபேச்சு, கண்டிப்பு யாவும் ஒருங்கே சேர்ந்திட அத்தகைய மாணாக்கர் குழாத்தை உருவாக்க அயராது உழைத்த உத்தமி, என் கடன் பணி செய்து கிடப்பதே எனக் கணவரும் தானும் இணைந்து கல்விப்பணி, சமூகப்பணிகளில் ஈடுபட்டனர். தனது ஊர் தனது பிள்ளைகள் தனது சுற்றம், தனது அயலவர் என உரிமை பூண்டு அன்போடும் பண்போடும் என்றும் பழகுவது இவருக்கேயுரிய தனியுடமைக் குணம் எனலாம்.

**"அறிவுடையார் எல்லாம் உடையார்"**

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க வாழ்ந்து புகழுடம்பு எய்திய ஆசிரியையின் பணியை என்றும் இவ்வூர் மறந்திடாது மதித்துப் போற்றும் என்பது திண்ணம்.

**ஓம் சாந்தி!சாந்தி!! சாந்தி!!!**

**மு.குமாரசாமி (தலைவர்)**
**ஐயப்பன் ஆலயம்**
**சில்வாவீதி,**
**வட்டக்கச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியாத நல்லாசிரியை

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க இப்படித்தான் வாழவேண்டும் என்று திட்டமிட்டு வாழ்ந்த ஒரு ஆசிரியையாக செல்வரத்தினம் ஆசிரியை விளங்குகின்றார். எமது ஊரில் இவருக்கென்று ஒரு தனித்துவம் உண்டு. நீண்டகாலமாக ஆசிரியப்பணி ஆற்றியதால் இவரிடம் கற்ற பலர் பல துறைகளிலும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றனர்.

அடக்கம் அமரருள் உய்க்கும் என்பதற்கொப்ப அடக்கம் நிறைந்தவர் ஆரவாரம் எதுவுமின்றித் தன் கடமையினைக் கண்ணெனக் கருதிக் கல்விப் பயிர் வளர்த்தவர் சமூக சேவையில் முன்னிற்கும் மனப்பாங்கு நிறைந்தவர்.

எனக்கு உறவினர் என்பதால் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் எப்போதும் ஏற்பட்டது. ஆதலால் அவரிடமுள்ள நல்லியல்புகளைப் பெரிதும் விரும்புபவன் நான். உள்ளத்தால் பொய்யாது ஒழுகிய நல்ல தாயை ஊரே இழந்திருக்கின்றது ஈடு செய்ய முடியாத பேரிழப்பால் தவிர்க்கும் உள்ளங்கள் ஆறுதல் பெறவும் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**க.கயிலாயபிள்ளை**
**கமநலசேவை ஓய்வு பெற்ற**
**உத்தியோகத்தர்**
**இராமநாதபுரம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியப் பணியால் அனைவர் மனங்களிலும் நிறைந்தவர்

கிளிநொச்சி மாவட்டத்தின் வரலாற்றிற்கு வலுச்சேர்த்து நிற்கும் வட்டக்கச்சி மண்ணின் பெருமையை உலகறியச் செய்ய உழைத்ததில் அமரர் திருமதி.செல்லையா செல்வரத்தினம் அவர்களுக்கும் பெரும் பங்குண்டு. தனது முப்பத்துநான்கு வருட ஆசிரியப்பணியின் பெரும்பகுதியை இருபத்தாறு ஆண்டுகளை தான் நேசித்த வட்டக்கச்சி மண்ணின் வளர்ச்சிக்குத் துணை நிற்கும் கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலையில் ஆற்றியிருந்தமை சிறப்புடையதாகும்.

மாதா,பிதா,குரு,தெய்வம் என்னும் முதுமொழிக்கு இணங்க ஆண்டவனுக்கு முன்னும், அன்னை, தந்தைக்குப் பின்னும் நின்று ஒரு மனிதனை ஆளாக்கும் அறிவுசார் பங்கு ஆசிரியர்களுக்கானதே! உலகில் நடக்கும் தவறுகள், குற்றங்கள், அதர்மம், ஆணவம் எல்லாவற்றிலுமிருந்து கடவுள் அவதாரங்கள் மனிதகுலத்தைக் காத்துநின்ற வரலாறுகளைக் கடந்து, அந்தத் தவறுகளும், குற்றங்களும், அநீதிகளும், அக்கிரமங்களும் நிகழ்ந்து விடாது தடுக்கும் பாரிய பொறுப்பை ஏற்று நிற்கும் சமூகச்சிற்பிகளான ஆசிரியர்களுக்கு எடுத்துக்காட்டாக அமரர். திருமதி. செல்லையா செல்வரத்தினம் அவர்களுடைய வாழ்க்கை அமைந்திருந்தது.

வட்டக்கச்சி வரலாற்றின் தொன்மைக் களஞ்சியமாக. மூன்று தலைமுறையினருக்கு ஆசிரியப் பணியாற்றி பல்லாயிரம் மாணவர்களை உருவாக்கிய நல்லாசிரியை எமது மண்ணுக்கும்,மக்களுக்குமாய் ஆற்றிய பணிகள் மகத்தானவை. எமது பிரதேசத்தின் வளர்ச்சிப்படிகள் ஒவ்வொன்றிலும் இவரது சிந்தனைவீச்சும், செயல்திறனும் நேரடியாகவும், மறைமுகமாகவும் படிமம் பெற்றுள்ளது.

ஒரு ஆசிரியராக மட்டுமன்றி தனது மாணவர்களின் எதிர்காலம், ஒழுக்கம்,மனப்பாங்கு, செயற்றிறம், சமூகவிழுமியம் போன்றவற்றில் நீண்ட கண்காணிப்பை பேணி வந்தவராக அவரை நான் பார்த்திருக்கிறேன். அவரால் உருவாக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான மாணவர்களுள் "நானும் ஒருவன்" என்ற பெருமிதம் எப்போதும் எனக்குண்டு. ஏனெனில் என்னுடைய கல்விக்கும்,உயர்வுக்கும் உரமிட்ட ஆசிரியர்களுள் இவருடைய பங்கும் அளப்பரியது.

மாண்புடைய மனிதராக, மகத்தான ஆசிரியராக மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து, வட்டக்கச்சியின் ஆன்மாவாக உறைகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் ஆசிரியையின் இழப்பு எம் பிரதேச வரலாற்றின் பேரழப்பாகும். காலன் கவர்ந்தாலும் காலத்துள் நிலைத்தவர்களாய் வாழும் பேறு பெற்றவர்களுள் ஒருவராய், தான் உருவாக்கிய ஒவ்வொரு மாணவர்களின் வளர்ச்சியிலும், உயர்ச்சியிலும் என்றென்றும் இவர் எல்லோர் மனங்களிலும் வாழ்ந்திருப்பார் என்ற நம்பிக்கையோடு அவரது ஆன்மா ஈடேற ஆண்டவனை வேண்டுகிறேன்.

**சிவஞானம் சிறீதரன்**
**பாராளுமன்ற உறுப்பினர்**
**யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,**
**இணைத்தலைவர் - கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு,**
**கிளிநொச்சி.**

## கண்ணீர் அஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 11 - 01 - 1932 |  | 12 - 05 - 2018 |

அமரர்

## செல்லையா செல்வரத்தினம்

### கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தோர்

1. கல்விச் சமூகம் – வட்டக்கச்சி மத்தியகல்லூரி
2. இராசேந்திரம் குடும்பம் – 271 சில்வா வீதி,வட்டக்கச்சி.
3. ந. சீலன் (தமிழரசுக் கட்சி வட்டக்கச்சி)
4. சிவஞானம் காந்தபூபதி குடும்பம் –பிள்ளைகள் (கனடா,லண்டன்)
5. கரைதுறைப்பற்று ப.நோ.கூ. சங்கம் பணிப்பாளர், பணியாளர்கள்
6. அருணகிரிநாதன் குடும்பம்
7. கிளி/ இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க எண்ணாத துயரம்

கிளிநொச்சி மாவட்டத்தில் மிகச் செழிப்பான கிராமங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்ற வட்டக்கச்சியிலே தமது இல்லற வாழ்க்கையை நடாத்திக் கொண்டு வட்டக்கச்சி இராமநாதபுரம் பகுதி மக்களுக்கு தமது நற்சேவையினை ஆற்றிக் கொண்டிருந்த திருவாளர் செல்லையா திருவாட்டி செல்வரத்தினம் தம்பதியினர் குடும்பம் எல்லோராலும் செல்லையா ரீச்சர் குடும்பம் என்று அன்பாக அழைக்கப்பட்டது.

இக் குடும்பம் இப்பிரதேச வாழ் மக்களுக்கு கல்வி சார்ந்த சேவையினையும் பொதுச் சேவைகளையும் மிகவும் விருப்புடனும் அர்ப்பணிப்புடனும் ஆற்றிவந்த நல்ல வல்ல வழித் தோன்றல் ஆகும்.

அறுபத்து மூன்று வருடங்களுக்கு மேலான வரலாறு கொண்ட இப்பகுதியில் அமரர் செல்லையா செல்வரத்தினம் அவர்களது சேவை வட்டக்கச்சி பிரதேச மக்களை மட்டுமல்லாது கிளிநொச்சி மாவட்ட கல்விச் சமூகத்தினையும் தன்பால் ஈர்த்தது என்றே சொல்ல வேண்டும்.

கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலையில் தான் அதிபராக கடமையாற்றிய காலத்திலே பாடசாலையின் நலன் விரும்பியாக இருந்து பல நல்ல ஆலோசனைகளையும் உதவிகளையும் புரிந்துவந்தார். நான் இடமாற்றமடைந்து பிறபாடசாலைக்கு சென்ற பின்பும் மற்றைய பாடசாலைகளினது கல்விச் செயற்பாடுகள் பற்றி ஆராய்ந்து நல்வழிகாட்டும் அறிவுரைகளை கூறுவார். இதற்கமைய பெருமைகளை தன்பால் கொண்டு அமரத்துவமடைந்த செல்வரத்தினம் ஆசிரியரின் பண்பு இனிவரும் சந்ததியினருக்கும் வழிகாட்டும் என்பதில் ஐயமேதுமில்லை.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய அனைவரும் இறைவனைப் பிரார்த்திப்போமாக.

திரு.சி.பாலகிருஷ்ணன்
அதிபர்,
கிளி/பளை மத்திய கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில்வா வீதியின் செல்வதி
# ஆசிரியர் செல்வரத்தினம்

## நீங்காத அருள் நினைவில்...

அன்று 28.06.1989 வெள்ளிக்கிழமை நானும் சதானந்தன் ஆசிரியரும் இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலைக்கு சென்றிருந்தோம். நேர அலுவலகத்திற்கு நுழைந்தோம். ஏதோ எதிர்பார்ப்புடன் இருந்தவர்கள் போல வகுப்பறைகளிலிருந்து ஆசிரியைகள் எட்டி எட்டிப் பார்ப்பதைக் கண்டோம். தொங்கல் வகுப்பறை ஒன்றிலிருந்து சிரேஷ்ட ஆசிரியை மெலிந்த, நிமிர்ந்த உருவம் புன்சிரிப்புடன் தன் சேலை தொங்கலால் தன் தோளின் வலப்புறத்தை இழுத்து மூடிக் கொண்டு வந்தார். சதானந்தன் வட்டக்கச்சி மகாவித்தியாலய ஆசிரியராக இருந்தவர். அவரையும் நன்கு அறிந்தவர். வாங்கோ ரீச்சர் வணக்கம் என்றார். அவரும் பதிலுக்கு Good Morning Sir நீங்களா! என்பதற்குள் சதாவே முந்திக் கொண்டு உங்களுக்குரிய புதிய அதிபரை கூட்டிக் கொண்டு வந்திருக்கின்றேன் என்றார். ஆ! நீங்களா வணக்கம் சேர் என்று கூறி இரு கைகளையும் கூப்பினார். ஆசிரியத் தொழிற்சங்க செயலாளராக இடைக்கிடை அப்பாடசாலைகளை தரிசித்தவன் அதனால் ஓரளவு அறிமுகமான முகங்கள் எட்டிப்பார்த்த ஆசிரியர்களும் ஒருவர் பின் ஒருவராக வந்தனர். இவர் தான் எங்களுடைய புதிய அதிபர் என்றார். சற்றும் எதிர்பாராத நிலையில் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நியமனம் பெற்று நேசித்துச் செயற்பட்ட பாடசாலையை பிரிந்து வந்த என்னை முதன்முதலாக அதிபரென வரவேற்றவர் ஆசிரியை செல்வரத்தினம் செல்லையா அவர்களே.

அனைவரும் அணுகிய முறையை பார்த்தால் அது ஒரு குடும்பம் அந்தக்குடும்பத்தின் தலைவி அவர்தான். உங்கள் மகனா நான் விழிக்க தவறு செய்தால் தண்டிக்கத்தானே வேணும் சேர் என்று அவர் முடித்தார். அவரது பெரும்தன்மையான குரல் தூக்கிவாரிப் போட்டது. அதே நேரம் அவரது கண்களிலிருந்து விழுந்த சில நீர்த்துளிகள் அவரது கடமையுணர்வையும் பாச உணர்வையும் வெளிக்காட்டின.

புதிய அதிபர் நெருப்பனாம் ரீச்சரின் மகனுக்கு நல்ல அடியாம் என்ற கதை எல்லா இடமும் பரவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நீர்த்துளிகள்

அந்த நீர்த்துளிகளே நல்லொழுக்கத்தில் சிறந்த பாடசாலையாக கட்டியெழுப்ப எனக்கு அத்திவாரமானது. இவரது துணைவர் அமரர் செல்லையா ஆசிரியர் அவர்கள் இங்கு ஆசிரியராகவும் இவரது இரண்டாவது மகள் ஜெகதாம்பிகை அப்போது தொண்டராசிரியராகவும், ஆசிரியராகவும் இங்கு பணியாற்றியுள்ளனர். வட்டக்கச்சி கிராமத்திலேயே ஒரு முன்னோடி ஆசிரியக் குடும்பமாக இவர்கள் திகழ்ந்தனர். ரீச்சர் நீண்ட காலம் முப்பத்தைந்து ஆண்டுகள் வரை சுமார் நான்கு தலைமுறைகளுக்கு ஆசிரியராக இருந்து 1991 வரை கடமையாற்றி இந்த கிராமத்தின் ஒரு முன்னோடியாக வாழ்ந்துகாட்டியதன் மூலம் சில்வா வீதிப் பகுதியில் அனைவராலும் அன்னையாக அவர் மதிக்கப்பட்டார்.

நான் பாடசாலை விட்டு விலகும் வரை எனக்கு ஆதரவு மிக்க ஆலோசகராகவும், வழிகாட்டியாகவும், பக்கத்துணையாகவும் திகழ்ந்த அவர் ஓய்வு பெற்றபின்பும் அழைக்கும் போதெல்லாம் பாடசாலையின் வேலைகளில் வந்து பெரும் பங்காற்றுவார். பாடசாலை அதிபர் விடுதியில் எனது குடும்பத்தினருடன் நான் குடியிருந்த போது அவர் வழங்கிய ஆதரவு அவரை எமது குடும்ப உறவினராகவே உணர்த்தியது. எனது பிள்ளைகள் அம்மம்மா ரீச்சர் என்றே அவரை அழைப்பார்.

நான் வட்டக்கச்சிக்கு வந்தால் அவரைத் தரிசிக்காமல் செல்வதில்லை வட்டக்கச்சியை சேர்ந்தவர்களை கண்டால் அவர் நலம் அறியாது விடுவதில்லை. தொலைபேசி அழைப்பு வந்தால் கூட அவர் நலமறியாது விடுவதில்லை. பதினொரு ஆண்டுகள் எம்முடன் ஒட்டி உறவாடி அன்னையின் பிரிவுச் செய்தி எமக்கு பேரதிர்ச்சியை தந்தது.

அன்னையின் ஆத்மா சாந்தியடைய நாமும் அவரது குடும்பத்தினருடன் இருந்து இறைவனை வேண்டுகின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**கலாபூசணம்**
**கனக.மகேந்திரா முன்னைநாள் அதிபர்**
**அகில இலங்கை சமாதான நீதவான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுஅறிவு

1. பூமியில் வளங்களுக்கு அதிக மதிப்புடைய வளம் எது?
   **மனித வளம்**
2. தமிழ் நாட்டில் மொத்த சக்கரை ஆலைகளின் எண்ணிக்கை?
   **42**
3. குறில் எழுத்தின் மாத்திரை அளவு?
   **01**
4. நெடில் எழுத்தின் மாத்திரை அளவு?
   **02**
5. ஆயுத எழுத்தின் மாத்திரையின் அளவு?
   **1/4 மாத்திரை**
6. நீரில் வேரூன்றி மிதந்து வாழ்கின்ற தாவரம்?
   **நிம்.ஃ.பியா**
7. எலியின் மூலம் பரவும் நோய்களில் மிகமுக்கியமானது?
   **பிளேக்**
8. இலங்கையில் சீதை சிறைவைக்கப்பட்ட இடம் எது?
   **அசோக வனம்**
9. சீதைக்கு காவலிருந்த பெண் யார்?
   **திரிசடை**
10. கவிச் சக்கரவர்த்தி என அழைக்கப்பட்டவர்?
    **கம்பர்**
11. அடர்ந்த காடு அதிகளவு காணப்படும் மாநிலம்?
    **அருணாச்சல பிரதேசம்**
12. டெல்டா என்பதன் கருத்து?
    **வண்டல்மண் சமவெளி**
13. கங்கை ஆற்றின் பிறப்பிடம் எது?
    **குடகுமலை**
14. வனப் பாதுகாப்பு சட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு?
    **1980**
15. நீர்ப்பரப்பு மீது வாழ்கின்ற தாவரத்திற்கு உதாரணம்?
    **ஜக்கார்னியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. நீர் நில வாழ்வன தாவரங்களுக்கு உதாரணம்?
**லிம்னோபில்லா**
17. கழிவு நீரில் மாசு கட்டிகளாக வளர்வது?
**குளோரெல்லா, ஆகாயத்தாமரை**
18. சூரியனில் வெப்பநிலை காண உதவும் வீதி?
**சார்லஸ் வீதி**
**பாயில் வீதி**
19. இராமாயணத்தில் 5 ஆவதாக அமைந்த கண்டம்?
**சுந்தர கண்டம்**
20. அறிவுரைக் கோவை என அழைக்கப்படுவது?
**முதுமொழிக்காஞ்சி**
21. முதன் முதலாக தொழில்புரட்சி நடைபெற்ற நாடு?
**இங்கிலாந்து**
22. குளோரினிலிருந்து தயாரிக்கப்படும் மருந்து பொருள்?
**குளோரோ.:.பார்ம்**
23. மனிதனுடைய உடல் உறுப்புக்களில் வாழ்நாள் முழுவதும் ஆரோக்கியமாக இருப்பது?
**மூளையில் உள்ள செல்கள்**
24. இத்தாலி நாட்டின் தேசிய மலர்.
**லில்லி**
25. மின்விளக்கை கண்டுபிடித்தவர்.
ஹம்பிளி டேவி
26. ஒரு மணி நேரத்தில் 74 கி.மீ வேகத்தில் ஓடுவது
**நெருப்பு கோழி**
27. எறும்புகள் உள்ள வகைகள்
1400 (அவைகள் ஒருபோதும் உறங்குவதில்லை)
28. நாயகரா நீர்வீழ்ச்சியை கண்டுப்பிடித்தவர்.
**லூயிஸ் ஹெனபின்**
29. ஆசியாவில் முதன் முதலாக தொழில் மயமான நாடு.
**ஜப்பான்**
30. சூரிய குடும்பத்தில் அதிக வெப்பமான கிரகம்.
**புதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* தனித்துவமாக இருக்க வேண்டும் என்பதே இளைஞர்களின் குறிக்கோளாக இருக்க வேண்டும்.

* கடின உழைப்பு மற்றும் நேர்மைக்கு மாற்று எதுவும் இல்லை. நிச்சயமாக இல்லை.

* கஷ்டம் வரும் போது கண்ணை மூடாதே, அது உன்னை கொன்று விடும்.கண்ணைத் திறந்து பார், நீ அதை வென்றுவிடலாம்.

* முடியாது என்ற நோய் நம்மிடம் பலபேரிடம் அதிகமாக உள்ளது. முடியும் என்று நம்பும் மனிதனால் தான் வரலாறு படைக்கப்பட்டு இருக்கிறது.

* கனவுகாண், கனவு காண், கனவுகாண்,பின் கனவுகளை எண்ணங்கள் ஆக்கி பிறகு செய்கையாக்கு.

* நீங்கள் சூரியனைப் போலப் பிரகாசிக்க வேண்டுமானால்,முதலில் சூரியனைப் போல எரிய வேண்டும்.

* சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துதான் ஆக வேண்டும் என்று உணருங்கள்.

* எல்லோரிடத்திலும், எல்லா விஷயங்களையும், அவர்களுக்குச் சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.

* அறிவு உயர உயர அடக்கம் உயர வேண்டும். அடக்கம் அறிவின் மிகுதியை தெரிவிக்கும் ஓர் அடையாளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* இமயத்தின் உச்சியை எட்டித் தொடுவதாயினும் சரி அல்லது உன் வாழ்க்கைப் பணியின் உச்சத்தை அடைவதாயினும் சரி, மேலே ஏறிச்செல்ல ஒருவருக்கு மிக்க மனவுறுதி தேவைப்படுகிறது.

* முடியாது என்ற நோய் நம்மிடம் பலபேரிடம் அதிகமாக உள்ளது. முடியும் என்று நம்பும் மனிதனால் தான் வரலாறு படைக்கப்பட்டு இருக்கிறது.

* கனவு என்பது நீ தூக்கத்தில் காண்பது அல்ல. உன்னை தூங்க விடாமல் பண்ணுவது எதுவோ அதுவே (இலட்சியக்கனவு) கனவு...ஆம்!! கனவு காணுங்கள்.

* நீ நட்சத்திரமாக ஜொலிக்க விரும்பினால் நீ யார் என்பது முக்கியமல்ல உனது மனது எதை விரும்புகிறதோ, அது நிச்சயம் உன்னை வந்துசேரும்.

* நீ நடந்து போக பாதை இல்லையே என்று கவலைப்படாதே, நீ நடந்தால் அதுவே ஒரு பாதை!

* ஒரு முட்டாள் தன்னை முட்டாள் என்று உணரும் தருணத்தில் புத்திசாலியாகிறான்! ஒரு புத்திசாலி தன்னை புத்திசாலி என்று பெருமை கொள்ளும் கணத்தில் முட்டாளாகிறான்!

* எல்லா உயிர்களிடத்தில் அன்பாய் இருங்கள்! ஆனால் மனிதர்களிடத்தில் மட்டும் விழிப்பாய் இருங்கள்!

* நாம் அனைவருக்கும் ஒரே மாதிரி திறமை இல்லாமல் இருக்கலாம்! ஆனால் அனைவருக்கும் திறமையை வளர்த்துக் கொள்ள ஒரே மாதிரி வாய்ப்புகள் உள்ளன!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* வாழ்க்கையில் முன்னேற மிகப்பெரிய வாய்ப்புக்கள் கிடைக்கும் எனக் காத்திருக்கக்கூடாது. தற்போது என்ன இருக்கிறதோ அதை வைத்து வெற்றிப்பயணத்தை தொடங்க வேண்டும்.

* கடலில் பயணத்தை தொடங்கும் போது கரைகள் மறைகிறதே என அச்சப்படக் கூடாது. கரைகளை கடக்கும் துணிவிருந்தால் தான் பல கடல்களை உங்களால் கண்டுபிடிக்க முடியும்.

* எளிமை, நேர்மை, உண்மை ஆகியவை இல்லாமல் எந்தக் காலத்திலும் உயர்வு இல்லை.

* தவறான காரியங்களை ஒருபோதும் செய்யக்கூடாது. இரு இலக்கை நோக்கிச் செல்ல பலவழிகள் இருந்தாலும் நேர்மையான வழியே மிகச் சிறந்த வழி என்பதுடன் அதுமட்டுமே வழியாக இருக்க வேண்டும்.

* உயரிய நோக்கம் இருந்தால் மனித ஆற்றலின் உச்ச எல்லை என்ற சுவர்கள் தவிடு பொடியாகிவிடும்.

* சரியான காரியத்தைச் செய்ய எளிமையான வழி என்ன என என்னிடம் கேட்கிறார்கள். தாயின் முகத்தில் புன்னகை அரும்பச்செய்யும் காரியத்தை செய்யுங்கள். அதனை நேர்மையாகவும், கடின உழைப்புடனும் செய்யுங்கள்.

* உங்களுக்குள் இறக்கைகள் உள்ளன. தவழ முயற்சிக்காதீர்கள். பறக்க கற்றுக் கொள்ளுங்கள். உச்சத்திற்கு பறந்து செல்லுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* புதிய விஷயங்களை படைக்கவேண்டும் என இலட்சியம் உள்ளவர்களுக்கு அவர்களது வேட்கையே ஊக்கமாக அமையும். மற்றவர்களைத் தோற்கடிக்க வேண்டும் என்ற எண்ணம் தேவையில்லை.

* வாரிசு அடிப்படையில் ஒருவர் தலைமை இடத்துக்கு வரலாம். ஆனால் தலைவருக்கான தகுதிகளை ஒருவர் சொந்தமாக மட்டுமே உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

* எப்போதும் வித்தியாசமாக சிந்திக்க துணிவு வேண்டும். தனித்துவமாக இருக்க வேண்டும்.

* கனவு காணுங்கள், கனவுகளிலிருந்து சிந்தனைகள் பிறக்கும் சிந்தனைகள் செயலாகும்.

## பயனுள்ள சில மருத்துவ குறிப்புக்கள்

* மருத்துவம் என்பது நோய்களைக் குணப்படுத்துவதற்கான கலையும், அறிவியலும் ஆகும். இது மனிதர்களின் உடல்நலத்தைப் பேணுதல், மீள்வித்தல் போன்றவற்றிற்காக உருவாக்கப்பட்ட செயல்முறைகளை உள்ளடக்கும்.

1. வெந்தயம், சுண்டைக்காய் வத்தல், மிளகு தலா 50 கிராம் எடுத்து வறுத்துப் பொடி செய்து தினமும் வெறும் வயிற்றில் சாப்பிட்டால் உடல் எடை குறையும்.

2. முழு நெல்லிக்காய் 4, பச்சைமிளகாய் 2, வெந்தயம் சிறிதளவு மூன்றையும் சேர்த்து நன்றாக அரைத்துச் சாப்பிடுவதன் மூலம் ஜீரணக் கோளாறுகளுக்கு தீர்வு காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. வெற்றிலையுடன் மிளகு மற்றும் பனங்கற்கண்டு சேர்த்துச்சாப்பிட்டால் தொண்டைப்புண் மற்றும் இருமல் குணமாகும்.

4. வெந்தயக் கீரையுடன் பச்சைமிளகாய், கொத்தமல்லி இரண்டையும் சேர்த்து அரைத்துச் சட்டினியாக சாப்பிட்டால் மலச்சிக்கல் தீரும்.

5. வில்லம் பழத்தின் தோலைசர்க்கரை சேர்த்து சாப்பிட்டு வந்தால் குடல் சுத்தம் ஆகும்.

6. வில்வ மரத்தின் பூக்களை உலர்த்திப் பொடி செய்து தேனில் கலந்து குடித்தால் வயிறு மந்தம் குணமாகும்.

7. வில்வ மரப் பூக்களை புளி சேர்க்காமல் ரசம் வைத்து சாப்பிட்டு வந்தால் ஜீரண மண்டல உறுப்புக்கள் வலிமை அடையும்.

8. வங்கார வள்ளைக் கீரையுடன் சீரகத்தைச் சேர்த்து கசாயம் வைத்துக் குடித்தால் பெருவயிறு குணமாகும்.

9. வங்கார வள்ளைக் கீரையை தொடர்ந்து உணவில் சேர்த்துக் கொண்டால் உடல் பருமன் குறையும்.

10. மூங்கில் முளைகளை ஊறுகாய் செய்து சாப்பிட்டால் ஜீரண சக்தி அதிகரிக்கும்.

11. முருங்கைக் கீரை சாற்றில் தேன் மற்றும் சுண்ணம்பைக் குளைத்துத் தொண்டையில் தடவிக் கொண்டால் இருமல் நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயமும் பிரதேச வழமைகளும்

இந்து ஆலயங்களின் வழிபாட்டு முறைகள் பெரும்பாலும் ஒரே மாதிரியானவையாகவே அமைந்துள்ள போதும் ஆகம முறைப்படியான நித்திய வழிபாட்டுடன் கிராமி பாரம்பரிய முறைப்படியான பொங்கல் நிகழ்வு எமது இந்த ஆலயத்தில் நடைமுறையிலுள்ளது. அதே போல் ஆலய வருடாந்த கிரியைகளைச் செய்யும் குடிமக்களின் கடமைகள் நிகழ்வுகளில் அயற்கிராம மக்களின் பங்களிப்பு நம்பிக்கைகள் ஆலயத்தை நிர்வகிக்கும் பரிபாலனசபையும் அதன் உறுப்பினர்கள் தெரிவுசெய்யும் முறையும் என்பன தனித்துவமுடையன அவற்றினை விளக்குவதே இக்கட்டுரையின் முனைப்பாகும்.

வற்றாப்பளைக் கண்ணகையம்மன் ஆலயத்தின் விசேடதினமாக வாரந்தோறும் திங்கட்கிழமைகள் கடைப்பிடிக்கப்பட்டு வந்தன. திங்கட்கிழமையிலே ஆரம்பகாலத்தில் பூஜை ஒரேநேரமாக நடந்து வந்தது. தற்போது எல்லா நாட்களும் மூன்று காலப்பூஜை நடைபெற்ற போதும் திங்கட்கிழமைகளில் மக்கள் வரவு அதிகமாகவே காணப்படுகின்றது. திங்கட்கிழமைகள், வெள்ளிக்கிழமைகள், மாதப்பூரணைதினங்கள், ஆடிஅமாவாசை, ஆடிச்செவ்வாய், நவராத்திரி,சிவராத்திரி, ஆடிப்பூரம், பங்குனி உத்தரம், வருடப்பிறப்பு, தைப்பூசம், மாசிமகம் முதலான சிறப்புப் பூசைகள் நடைபெறுகின்றன. ஆலய நாட்காட்டியில் அபிஷேகதினங்களும் உபயகாரர் விபரங்களும் அடக்கப்பட்டுள்ளது. இருந்தபோதும் பங்குனி மாதத்திங்கள் தினங்கள் கார்த்திகைமாதத் திங்கட்கிழமைகள் விசேடதினங்களாகவும் அதிகமக்கள் கூடும் தினங்களாகவும் உள்ளன. கடைசிப்பங்குனித் திங்களன்று மஞ்சோற்சவம் நடைபெறும்.

வருடாந்தப் பொங்கல் தினம் வைகாசி( தமிழ்) மாதம் பூரணையும் விசாகமும் சேர்ந்த அல்லது அண்மித்த திங்கட்கிழமை நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கல் நிகழ்ச்சியின் ஆரம்பக்கிரியை பாக்குத்தெண்டல் எனப்படும். இந்நிகழ்ச்சி பொங்கல் நடைபெறும் திங்கட்கிழமைக்கு பதினைந்து நாட்கள் முன்னதாகவுள்ள திங்கட்கிழமை (அமாவாசைக்கண்மித்த திங்கள்) அதிகாலை நடைபெறும். இதற்கடுத்த திங்கட்கிழமை பிற்பகல் தீர்த்தமெடுத்தல் நிகழ்வு நடைபெறும் மூன்றாவது திங்கள் பொங்கல் தினமாகும்.

இப்பொங்கலுக்குரிய கிரியைகளை பரம்பரையாகச் செய்துவரும் பிராமணக்குருக்கள், மாப்பாணவேளாளர் குலத்தவரான பூசாரியார், அவர்களின் குடிமக்கள் அல்லது உதவியாளர்களான கோபியர், தச்சர், வண்ணார், பறையறைவோர் ஆகியோர் பங்குபற்றுகின்றனர். இவர்கள் அனைவரும் பரம்பரை பரம்பரையாக ஈடுபடுவோராவார். பயபக்தியாக விரதம் அனுட்டித்து இக் கருமங்களைச் செய்யுமிவர்கள் நோற்பாளர்கள் என அழைக்கப்படுவதுடன் ஒரே இடத்தில் தங்கி சமைத்து உணவுட்கொண்டு கடமைகளைச் செய்வர்.

முதல் நிகழ்வான பாக்குத் தெண்டல் தீர்த்தமெடுத்தல் ஆகிய கிரியைகள் முள்ளியவளை காட்டாவிநாயகர் ஆலயத்தில் அமைந்துள்ள கண்ணகையம்மன் கோயில் மண்டபத்திலேயே ஆரம்பிக்கப்படுவது வழமை. இதற்கான காரணம் என்ன? என விளங்கிக் கொள்வது நன்று. இளஞ்சிங்கமாப்பாணன் என்னும் வேளாளத் தலைவன் முள்ளியவளைப் பகுதியை தனதாட்சிக்குட்படுத்தித் தனது குடிமக்களுடன் குடியேறி வாழ்ந்ததாக வரலாறுண்டு. முள்ளியவளை ஆட்சிப்பிரிவினுள் வற்றாப்பளைக்கிராமமும் அடங்கியிருந்தது. வற்றாப்பளை முள்ளியவளையின் ஒரு பகுதியாக இருந்ததுடன் இருகிராமங்களிலும் வாழ்ந்த மக்களும் ஒரே குடும்பத்தினராகவும் உறவினராகவும் இருந்துள்ளனர். காட்டாவிநாயகராலயமே இரு கிராமங்களுக்கும் ஆலயமாயிருந்துள்ளது. அம்மன் வற்றாப்பளையில் அமர்ந்திருக்குமிடம் அப்போது வயல் நிலமும் சுற்றவரக் காடடர்ந்த வனவிலங்குகளின் நடமாட்டமுள்ள இடமாகவும் இருந்துள்ளது. 1900 ஆம் ஆண்டும் அதன் பிற்பட்ட காலத்திலுமே தற்போதைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயச் சூழலில் மக்கள் குடியமர்ந்தனர். இதன் காரணமாக மக்கள் குடியிருப்புக்களினதும் இரு கிராமங்களுக்கும் பொதுவான ஆலயமான காட்டா விநாயகராலயத்தில் அம்மன் கோயில் அமைத்து குடும்பத்தில் அம்மனை ஆவாகனம் செய்து ஏழு இரவுகளும் அங்குதங்கி மடைகளையும் காவியம் படித்தல் போன்ற கிரியைகளையும் செய்ததுடன் பொங்கற்பணிபுரியும் ஐயரின் வாழ்விடமான கல்யாண வேலவர் ஆலயத்திற்கண்மையில் மடைப்பண்டம் எடுக்கும் கிரியையும் செய்தனர் தற்போது காட்டாவிநாயகராலயத்தண்மையிலேயே நோற்பு மடமும் மடைப்பண்டம் எடுப்பதும் நடைபெறுகின்றது.

பொங்கல் சம்பந்தமான கிரியைகள் பாக்குத்தெண்டல் குறித்த திங்கட்கிழமை விடிய முன் இரவு ஒரு மணிவரையில் பூசாரியார் நீராடி ஆசார சீலராகக் காட்டாவிநாயகராலயம் சென்று விநாயகரை வணங்கி அங்குள்ள அம்மன் ஆலயத்துள் மடைபரப்பி பூசை செய்து இறையருள் வேண்டி எல்லாக் கிரியைகளிலும் பங்கு கொள்பவரும் குடிமகனுமான கோபியரை ஆசீர்வதித்து மங்கலப்பொருட்களைக் குறித்த ஒன்பது வீடுகளில் பெறும் பொருட்டு விடை கொடுப்பார். அவர் வெள்ளைத்துணியினால் வாயை மூடிக்கட்டியபடி மௌனமாக ஆசாரசீலராக முள்ளியவளை வற்றாப்பளை தண்ணீரூற்று ஆகிய கிராமங்களிலுள்ள குறித்த ஒன்பது வீடுகளின் வீதியோரக் கேற்றுக்களை அடையும்போது அதற்கெனவே எதிர்பார்த்திருந்த உரிமையாளர்கள் ஆசாரசீலராகக்குறித்த மங்கலப் பொருட்களான வெற்றிலை, பாக்கு, மஞ்சள் தட்சணை என்பவற்றைக் கொடுப்பார். தான் கொண்டுவந்த தூய மஞ்சள் தேய்த்த துணியில் அவற்றை ஏற்று மீண்டும் ஆலயத்திற்குச் செல்வார். வாய்பேசாது மௌனமாக இக்கடமையை அதிகாலை ஐந்துமணிக்குமுன் நிறைவேற்றி அவற்றை ஆலயத்திலமைந்துள்ள வேப்பம் மரக்கிளையில் பாதுகாத்துக் கொள்வார். குறித்த ஒன்பது வீட்டுப் பரம்பரையினர் ஆரம்பகால, ஆலயபராமரிப்பாளர்களெனவும் மிக அண்மைக்காலம்வரை பொங்கல் செலவுகளுக்காக தலா 15 மரக்கால் நெல் வீதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்துக்கு வழங்கியும் வந்தனர் எனவும் அறியமுடிகின்றது.

**தீர்த்தமெடுத்தல்**

பாக்குத்தண்டலுக்கு அடுத்த திங்கட்கிழமை பிற்பகல் 2.00மணி அளவில் குறிப்பிட்ட அம்மன் மண்டபத்தில் பொங்கல் குருக்கள் பூசை வைப்பார். அம்மன் சன்னிதானத்தில் உரியவர் வெள்ளை விரிக்க பித்தளைக்குடமொன்று அதன்மேல் வைத்து தூபதீபாராதனை செய்து விபூதி தரித்து வெள்ளைத்துணியினால் காப்பிட்டு பாக்குத்தண்டிய அதேகுடிமகனிடம் பூசாரியார் குடத்தினைக் கையளிப்பார். தோளில் வைத்த குடம் ஏனைய குடிமக்கள் சேரவர மேலாப்பு மங்கலப் பறைமுழக்கத்துடன் கள்ளப்பாட்டுக் கடற்கரை நோக்கிப்புறப்படும். புதறிகுடா, ஊற்றங்கரை தண்ணீரூற்று பிரதானவீதி வழியாக மூன்றாங்கட்டைச்சந்தியில் இறங்கி இளைப்பாறுவர். அதன்பின் சிலாவத்தையை அடைந்து அங்கிருந்து இந்துசமுத்திரக் கரையை அடைவர். அயற்கிராம மக்கள் ஆசார சீலராக பெரும் திரளாக ஊர்வலத்தில் கலந்து கொள்வர்.

கடற்கரையில் கள்ளப்பாடு ஆதி வைரவர் கோயிலைச் சேர்ந்த தொண்டர்கள் கோயில் ஒன்று அமைத்து தீர்த்தக் குடத்தினை வரவேற்பர். அங்கு குடம் இறக்கப்பட்டு கடல் அனுபவம்மிக்க கள்ளப்பாட்டுத் தொண்டர்களின் பாதுகாப்புடன் நெஞ்சளவு ஆழமுள்ள நீரில் இறங்கி எதிர்பார்த்திருந்து பெரிய அலை வரும் போது நீருள்மூழ்கி குடத்தில் நீர்நிரப்பப்படும். நிரப்பிய குடம் வெள்ளைத்துணியினால் காப்பிடப்பட்டு மீண்டும் தற்காலிகக் கடற்கரை ஆலயத்தில் இறக்கி வைத்து பூசை செய்வித்து சற்று நேரம் இளைப்பாறிய பின் குடம் தோள்மீது ஏற்றப்படும். இதேநேரம் கடற்கரையில் எடுத்த மணல்முடிச்சு ஒன்றினை உதவியாளர் ஒருவர் கொண்டு வருவார். குறித்த ஊர்வலம் வீதி எங்கும் நிறைகுடம் வைத்து தேங்காய் உடைத்து மக்கள் வரவேற்பைப் பெற்று சிலாவத்தையிலுள்ள அம்மன் ஆலயத்தில் இறக்கப்பட்டு பூசை செய்யப்படும். நோற்பாளருக்கு இளநீர் கொடுப்பார்கள். இவ்வாலயத்தை சுற்றியுள்ள கிராமமக்கள் கூடி தீர்த்தக்குடத்தினைத் தரிசிப்பார்கள். சிலாவத்தை ஆலயத்தில் தூக்கிய தீர்த்தக்குடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதியோர மக்களதும், ஊற்றங்கரை விநாயகர் ஆலயத்தினதும், மங்கல ஆராத்திவரவேற்புடன் சென்று புதறிக்குடாளத்தைக் கடந்து அதற்கெனக்குறிப்பிட்ட ஓர் இடத்தில் அமைக்கப்பெற்ற பந்தரில் இறக்கப்பட்டு, இளநீர் அருந்தி இளைப்பாறியபின் பவனி ஆரம்பமாகும். இப்பவனி முள்ளியவளை மக்களின் பெருவரவேற்புடன் காட்டாவிநாயகர் ஆலய அம்மன் மண்டபத்தை அடையும்.

இதேவேளை தீர்த்தக்குடத்தை கையளித்த பூசாரியார் வற்றாப்பளை அம்மனது ஆலயஞ் சென்று வழிபாடு இயற்றி அனுமதி பெற்றபின் தமது வீட்டருகே மங்கலப்பொருட்களான சிலம்பு, பிரம்பு, அம்மானை போன்றவற்றைப் பாதுகாப்பாக வைத்திருக்கும் மண்டபத்தில் காவல்வைரவருக்கு பொங்கல் செய்து வழிபட்டபின் குறித்த மங்கலப்பொருட்களுடன் நாவற்காட்டிலுள்ள பத்தஞானி சமாதியடைந்த இடத்திற்கு வெள்ளை விரிப்பவரான குடிமகன் ஒருவருடன் மௌனமாகச் சென்று வழிபாடு செய்வர். தீர்த்தக்குடம் ஆலயத்தை அண்மிக்க இவர்களும் அங்கு சென்று சேர்வார். அதன்பின் முதலாவது மடைபரப்பி கொண்டுவரப்பட்ட மணல் பொதியின் மீது மண்பானை வைத்து திரியிட்டு நீரில் விளக்கேற்றி அம்மனுக்கு பூசை வழிபாடு ஆரம்பிக்கப்படும். (ஆரம்பத்தில் பால்கறக்கும் கலையம் எனப்படும் மண்பானையிலே விளக்கேற்றியதால் அதேபோன்ற மண்பாத்திரம் விளக்கேற்றப்பயன்படுத்தப்படுகின்றது.) இவ்விளக்கினைத் தொடர்ந்து எரியும்படி பராமரிப்பது, சிந்து, அம்மானை, குளிர்ச்சி, ஆகிய பாடல்கள் பாடும்போது உடுக்கு இசைப்பது போன்ற கடமைகள் ஒரு குடிமகனுக்குரியது. அதேபோல் மேலாப்புப்பிடித்தல் நிலவிரிப்பு விரித்தல் தேவையான இடங்களில் வெள்ளை கட்டுதல், விரித்தல், தூய அடைகளை குருக்கள் பூசாரியார் ஆகியோருக்கு வழங்குதலை ஒரு பரம்பரையினரும், பாதைகளில் மங்களமுரசறைதல், பூசையின்போதும் பூசாரியார் குருக்கள் ஆகியோர் கச்சுநேருதல் தூளிபிடித்தல் வளந்துநேருதல் ஆகிய காலங்களில் தாளலயம் தப்பாமல் முரசறைதலினை உரிய பரம்பரையினர்கள் செய்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்களின் நம்பிக்கையும் செயற்பாடும்

இப்பகுதி மக்கள் இன்பத்திலும் துன்பத்திலும் நினைவிலும் மறந்த நிலையிலும் அம்மனையே வாய்பேசும் அளவிற்கு ஒன்றுகலந்தநிலையில் இருப்பவர்கள். பொங்கல் கால ஆரம்பநிகழ்வான பாக்குத்தெண்டலுடன் விரதனுட்டானம் ஆரம்பிப்பார். வீடுகளில் எந்தவிதமான நிகழ்ச்சிகளையும் (திருமணம், வீடுகுடிபுகுதல், உட்பட) செய்யமாட்டார்கள். ஆலயங்களிலும் கூட விழாக்கள் எதுவும் நடைபெறாது. மரணம் சம்பவித்தாலும் பறைஒலி முதலிய ஆராவாரம் எதுவும் இல்லாமலே அமைதியான நல்லடக்கம் நடைபெறும். பொங்கல் முடிந்து வரும் அடுத்து வரும் வெள்ளிக்கிழமை முன்னிரவு பத்தஞானி சமாதியடைந்த இடத்தில் பொங்கல் நடைபெறும். பத்தஞானிக்கான பிரதான பொங்கல் தச்சர் மரபினரால் நிறைவேற்றப்படும். இதற்கு பொங்கல் செய்வதற்கு மட்டுப்படுத்தப்பட்டவர்களே செல்வதும் மௌனமாகச் செல்வதும் மரபு பொங்கிப் படைத்தவுடன் சூகை எனப்படும்.(கட்டெறும்பு வகையைச்சேர்ந்தகடி எறும்பு) அவ்விடம் முழுவதும் பரவி ஊர்வதும் தற்போதும் நிகழ்கின்றது ஆச்சரியமானதே. இந்நிகழ்வுடன் கோயிலில் பொங்கல் கிரியைகள் யாவும் முடிவடைகின்றன.

## பரிபாலனசபையும் உறுப்பினர் தெரிவும்


வன்னியின் இப்பகுதிக்குறுநில ஆட்சித்தலைவர்களின் ஆதரவுடன் சீராகவிருந்த இவ்வாலயம் ஐரோப்பியர் இப்பிரதேசங்களைக் கைப்பற்றி ஆட்சியுரிமைகளைப்பறித்ததுடன் இந்து எதிர்ப்புக்கொள்கையையும் கடைப்பிடித்ததனால் வருமானம் இன்மையும் வளர்ச்சியும் இன்றி இருக்கும் நிலை ஏற்பட்டது. நிலவுடைமையாளர்களான கமக்காரக்குடும்பங்கள் சிலரது ஆதரவுடன் கோயில் பாதுகாக்கப்பட்டு வந்தது. அவர்களில் ஒருவரே பூசாரியாக கோயில் கடமைகளைச் செய்து வந்துள்ளார்.அக்காலத்திலேயே சமய எதிர்ப்புக் காரணமாக கோயிலை இடிக்க வருகைதந்த பறங்கித் துரைக்கு பனிச்சமரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய்களால் அடித்துத் துரத்தியதும் வற்றாப்பளை பாதுகாப்பான இடம் ஆனது. சமயம் மாற்றுபவர்களோ எதிர்ப்பாளர்களோ இங்குவருவதில்லையாம். அதனால் வன்னியின் ஆட்சியுரிமையை இழந்தபரம்பரையைச் சேர்ந்த பலர் இக்கிராமத்தில் குடியேறி பாதுகாப்பாக வாழ்ந்ததாகவும் அக்காலத்திலேயே சின்னவன்னி என்ற அரசபரம்பரையினரால் ஆலயத்துக்கு வயல்தானம் செய்யப்பட்டதாகவும் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. சில காலம் பொங்கல் செய்வதைப் பூசாரியாரும் வாரம் தோறும் திங்கட்கிழமைகளில் பிராமண குலத்தவர்களும் பூசை செய்துவந்துள்ளனர். கோயிலின் வருவாய்களும் இருபகுதியினருமே பெற்றனர்.

ஆலயவளர்ச்சியின் மீது அக்கறை கொண்ட கிராமத்தவர்களும் அயற்கிராமத்தவர்களான தம்பையாமுதலியார் சபாரத்தினம், ஆ.ம கனசபாபதி ஆகியோரது வழிகாட்டலின்படி வற்றாப்பளை கிராம ஆலய பரம்பரை உரிமைகாரரும் அப் பிரதேசத்தில் சூழவுள்ள கிராமத்தின் நல்ல ஒழுக்கமுள்ள சமயநடைமுறைகளை சேவை மனப்பாங்கு சமூக நன்மதிப்பு போன்ற கருத்திற் கொண்டு உறுப்பினரையும் கொண்டு ஓர் வலுவான சட்டப்படியான பரிபாலனசபையொன்று 1958 ம் ஆண்டு உருவாக்கப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறநெறியும் நமது சமூக விழுமியமும்

நமது இலங்கைத்தீவில் அன்று அறநெறியைப் பின்பற்ற வேண்டிய விழுமியத்தை மக்களுக்கு எடுத்துரைத்து தமிழையும் சைவத்தையும் வளர்த்தெடுத்தார். யாழ்ப்பாணத்தில் பிறந்த பெரியார் ஆறுமுகநாவலர் அவர்கள் 1822இல் பிறந்து 1879ம் ஆண்டு சிவபதம் அடையும் வரை சைவத்தையும் தமிழையும் ஐரோப்பிய ஆட்சி மழுங்கடிக்காது பேணிக்காத்து சைவசமயம் நிலைத்து நிற்க பெரும் பணியாற்றியவர் அவர்.

அச்சைவப்பயிர் பல இடையூறுகளுக்கு மத்தியில் வாடி வதங்கும் சூழல் ஏற்பட்டதொன்று. அதை பேணிக்காக்கும் பெரும் பொறுப்பை இந்துசம கலாசார அலுவல்கள் திணைக்களம் ஏற்று மாவட்டங்கள் தோறும் ஆலயங்களின் சார்புடன் அறநெறிப்பாடசாலைகளை ஏற்படுத்தி அதன் மூலம் இந்து சமயத்திற்கும் கலாசாரத்திற்கும் அளப்பரிய சேவையாற்றிவருகின்றது. ஆயினும் எம் மாவட்டத்தில் உள்ள மக்களும் மாணவர்களும் ஒன்றிணைந்து நல்ல முறையில் பயன்படுத்தி தக்கதொரு விழிப்புணர்வை பெற்றுக்கொள்ளும் நோக்கம் மிகமிகக் குறைவாகவே காணப்படுகின்றது. அதற்கான காரணங்களைஆராயும் போது போர்க்கால சூழ்நிலையில் இருந்து இன்னும் சரியான மனநிலைக்கு மக்கள் திரும்பாமையொன்று மற்றது பாடசாலை மாணவர்கள் மேலதிக வகுப்புக்கு செல்லவேண்டியுள்ளதால் முறையாக அறநெறிப்பாடசாலைக்கு முகம் கொடுக்காமை அடுத்ததாக ஏட்டுக்கல்வியே முக்கியமானது என்ற விளங்காத் தன்மையான மனப்பாங்கு இப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்து மக்களையும் மாணவர்களையும் விடுவிப்பதற்கு காலந்தான் பதில் சொல்ல வேண்டும். இந்த நிலை நீடிக்குமானால் எங்கள் சமயமும் சமய விழுமியங்களும் அறநெறியும் எங்கே போய் முடியுமோ என்ற மனத்தாக்கம் எங்கள் மத்தியில் பெரும் வேதனையைத் தரும் ஒரு விடயமாக மாறிக்கொண்டிருக்கின்றது.

இந்த உலகில் எதுவுமே நிலையில்லாதது என்பதும் தர்மம் மட்டுமே தலைகாக்கும் என்பதும் நினைவு கூரப்படவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவபுண்ணியங்கள் தவறாமல் அதற்குரிய பலன்களை எமக்கு தந்தேதீரும். இறைவன்மட்டுமே நிரந்தரமானவன் என்பதும் அவன் அடியினை நோக்கியே எங்கள் செயற்பாடுகள் அமையவேண்டும். என்பதும் ஆத்மீக சிந்தனை உடையவர்கள் எமக்குக் காட்டிய பாடமாகும். சிந்தனைகளுக்கு இதுவே காரணம் என்றும் 1990ம் ஆண்டில் வெளியான இளைஞர் ஆணைக்குழுவின் அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

அப்படியான ஆத்மீக சிந்தனையின் பெறுபேற்றை நடந்து முடிந்த போரானது எமக்கு அறிவுறுத்தியிருக்கின்றது. அப்படியிருந்தும் எங்கள் மத்தியில் இன்னும் விழிப்புணர்வு ஏற்படவில்லை. உயிர் இழப்பினதும் பொருள் இழப்பினதும் தாக்கத்தில் இருந்து எம்மவர் விடுபடவேண்டும். இதற்கு அறநெறியும் அதனால் ஏற்படும் ஆத்மீகமுமே நமக்கு நல்வழி காட்டும் என்ற உறுதிப்பாடு எம்மக்கள் நெஞ்சங்களில் புகுத்தப்படவேண்டும். இல்லாவிட்டால் இத்துயரத்தின் பிடியில் இருந்து விடுபடமுடியாது.

இத்துயரத்திற்கு கடவுள்தான் காரணம் என்று கடவுளின்மேல் பழியைப்போட்டு கடவுள் சிந்தனை கோயில் வழிபாடு என்பவற்றை மறந்து உலகப்பற்றில் அமிழ்ந்து மேன்மேலும் பாவங்களையே செய்து கொண்டிருக்கின்றோம். அந்த செயற்பாடே எம்மைப் பாவமென்ற படுகுழிக்குள் தள்ளி மேலும் அழிவையும் துன்பத்தையும் ஏற்படுத்தும் என்பதை ஏனோ உணரவில்லை. பாடசாலைக்கல்வி பட்டத்தையும் பதவியையும் தந்து வல்லவன் ஆக்கலாம் ஆனால் நல்லவன் ஆக்கமுடியாது. நல்ல பண்பும் அறநெறி வாழ்க்கையும் மனிதனை நல்லவன் ஆக்கும் என்பது சமய அறிவாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. அதாவது சமயம் சார்ந்த நெறிமுறைகளும் உயர்ந்த பண்புகளான அன்பு, சத்தியம், நேர்மை, இன்சொல், பொறுமை, சேவை, தியாகம், அகிம்சை, தர்மம், மனஅடக்கம், அமைதி, என்பவற்றை நாம் எம்மனதில் பதித்துக்கொள்ள வேண்டும். அத்துடன் பெரியோரை, பெற்றோரை, குருவை, நலிந்தோரை மதித்தல் பிறருக்கு உதவுதல் போன்ற நற்குணங்கள் தற்போதைய மாணவர் மத்தியில் அருகிக்கொண்டே வந்துவிட்டது. இப்பண்புகளை பெற்றோரும் ஆசிரியர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறநெறியாளரும் மதகுருமாரும் மிகக்கவனமெடுத்து வருங்கால சந்ததிகளுக்கு புகட்டியே ஆகவேண்டும். இந்தப் பண்புகள் இல்லாததால்தான் துன்பத்தையும் துயரத்தையும் அனுபவித்துக்கொண்டிருக்கின்றோம் என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

பாடசாலைக் கல்வி அறிவையும் பரீட்சையையும் குறிக்கோளாகக் கொண்டே போதிக்கப்படுகின்றது. இதன் விளைவாக பிள்ளைகளின் மனநிலையினிலோ அல்லது அவர்தம் வாழ்விலோ சமயம் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை என்றும் குறிப்பாக எமது நாட்டில் இளைஞர் மத்தியில் முரண்பாடான சமய போதனை என்பது அறிவாக மட்டுமல்லாமல் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்த நெறியாக அமையவேண்டும். ஐம்பெரும் காப்பியங்களும், கம்பராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களும் பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடல் புராணம், பகவத்கீதை போன்ற சமயநூல்களும் கதைமூலமான நன்நெறிகளைப் புகட்டுகின்றன. இதைக் கவனத்தில் கொண்டுதான் எம் மூதாதையர் மடாலயங்கள் அமைத்து இவற்றைப்படித்து பயன் சொல்லி மக்களின் மனதில் பதியும்படியாக நன்நெறிகளை சமூகரீதியாக வளர்த்தனர் பெற்றோர் மனதில் இந் நன்நெறிகள் வேரூன்றியதால் தம் மக்களையும் அந்தரீதியில் வளர்த்தெடுத்தனர். அதனால் சமூக விழுமியங்கள் சிறந்ததாகக் காணப்பட்டன.

நாங்கள் சிறுபிள்ளைகளாக இருக்கும்போது பாட்டிமார் இக்கதைகளை எமக்கு இளமையிலேயே கூறியதால் நற்பண்புகளும் சமய நம்பிக்கைகளும் எம்மனதில் நன்கு வேரூன்றின. இளமையிலேயே வேரூன்றிய எண்ணங்கள் எம்மை நல்வழிப்படுத்தின. அக்காலமக்கள் பண்புசார் பழக்கவழக்கங்களையும், சமய விழுமியங்களையும் பேணிப்பாதுகாத்தனர். இதனால் பரஸ்பர நல்லுறவும் ஒற்றுமையும் அவர்கள் மத்தியில் காணப்பட்டதால் அறுவடையும் வசந்தகாலத்தில் சமயவிழாக்களும் கலைவிழாக்களும் மேற்கொண்டு கலைகலாசாரத்தை வளர்த்து அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து மனிதவாழ்வின் மேம்பாட்டை பறைசாற்றினர்.

விஞ்ஞானம் வளர வளர மெய்ஞ்ஞானம் மறைந்து அஞ்ஞானம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைகொண்டுவிட்டதால் சந்தோசமோ மனநிம்மதியோ அற்ற பரபரப்பான ஒரு வாழ்க்கையை வாழ்ந்து அளவுக்குமிஞ்சிய ஆசையைவளர்த்து அதன்நிமித்தம் பல பாவங்களைச் செய்துகொண்டும் நேரமில்லை நேரமில்லை என்றும் ஓடிக்கொண்டிருக்கின்றோம். அத்துடன் போட்டியும் பொறாமையும் அவதூறும் ஆக்கி வாழ்க்கையை சந்தோசமற்ற ஒரு விரக்தி நோக்கோடு வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். இந்நிலை ஒழியவும் ஒரு பண்பாடான சூழ்நிலை உருவாகவும் நல்லுறவு வளரவும் சமயப்பற்று மேம்படவும் இறைநம்பிக்கை மூலம் இறைவனிடம் இரண்டறக்கலந்து பேரின்பம் அடையவும் அறநெறிவகுப்புக்களும் செயன்முறைக் கல்வியும் எமக்கு வழிகாட்டும்.

மகாத்மகாந்தி அவர்கள் கூறியதுபோல சிலசமயங்களில் "அறிவு நமக்கு வழிகாட்டுவதில்லை அப்போது நமது நம்பிக்கையே வழிகாட்டுகின்றது. ஆகவே நம்பிக்கை அளவிற்கு முரண்பாடானது அல்ல அறிவிற்கும் அப்பாற்பட்டது. அறிவு நம்மைக் கைவிடும்போது நம்பிக்கை நமக்கு உதவுகின்றது. இதுவே கடவுள் நம்பிக்கை ஆகவே நாம் அற்ப ஆசைகளை உண்மையானது நிரந்தரமானது என எண்ணி வாழ்நாளை பாழாக்காது இம்மை, மறுமை, இன்பங்களை அடையும் பொருட்டு இறைவன்மேல் முழு நம்பிக்கையை வைத்து நற்பண்புகளை மேற்கொண்டு வாழும்காலத்துள் பெறவேண்டிய நற்பண்புகளைப் பெறவேண்டும் என்று திடசங்கற்பம் கொள்வோம். இதைத்தான் வள்ளுவரும்

"நாள் என ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும் வாளது உணர்வார்ப் பெறின்... என்று கூறியுள்ளார். ஒவ்வொரு செக்கனும் எங்கள் வாழ்க்கையின் ஆயுட்காலம் கழிந்துகொண்டே இருக்கின்றது என்பதை உணர்ந்து உடனேயே மனங்களை மாற்றி நல்லவராக வல்லவராக இறையடியை நோக்கிபயணிப்போமாக. இக் குறிக்கோளுடன்தான் சமயமும் அறநெறியும் நமக்கு வழிகாட்டுகின்றது. ஆகவே எல்லோரும் அதாவது பெரியோரும் சிறியோரும் அறநெறியை பின்பற்றுவோமாக அறநெறி வகுப்புக்களில் பங்குபற்றி வாழ்வின் பயனை பெறுவோமாக.

**வணக்கம்.** திருமதி சு சிவபாலன் ஓய்வு பெற்ற அதிபர் வற்றாப்பளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிலம்பு கூறல் காவியம்

பண்டைத் தமிழ் இலக்கியங்கள் பல அவற்றுள் ஐம்பெரும் காப்பியங்களாய் அன்னையாந் தமிழ் மாதின் அணிகலன்களாய்த் திகழ்வனவற்றுள் ஒன்றாகிய சிலப்பதிகாரம் செந்தமிழ் நாட்டிற் பிறந்த செல்வி கற்புக்கணலாங் கண்ணகையாரின் சரித்திரத்தை விரித்து உரைத்திருப்பதை இலக்கியங்கண்ட வித்தகர் யாவருமறிவர் அன்றியும்,

"புலவர்க்கு வெண்பா புலி" என்பார்கள். அத்தகைய வெண்பாவிற் புகழ் பெற்ற புகழேந்திப் புலவரும், யாவரும் எளிதில் விளங்கிக் கொள்ளக்கூடிய இனிய செந்தமிழ் நடையில் கதாரூபமாகக் கண்ணகியாரின் கதையைக் கூறியிருப்பதும் காணற்குரிய ஒன்றாகும். இத்தகைய புகழேந்தியாரும், சிலப்பதிகாரத்தைப் பாடிய இராசகுமாரனாம் இளந்துறவி இளங்கோவடிகளும் தமிழ் நாடாகிய தாய்நாட்டைச் சேர்ந்தவர்கள் ஆனால்,

ஈழத்துப் பெரும் புலவர்களாய் இனிய செந்தமிழிலே யாவரும் மிக இலகுவாகக் கற்றுணரக்கூடிய கதை வடிவிலே வெண்பா,விருத்தப்பா- கலிப்பா, ஆசிரியப்பா ஆகிய பாடல்களினால் அந்தாதியாகப் பாடிய பாடல்கள் ஏட்டுச் சுவடிகளாய் போற்றுவாரற்றுப் புகழற்று மறைந்தழிந்து போகும் நிலையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன.இப்பாடல்களைத் தேர்ந்தெடுப்பது அச்சுவாகனமேற்றி இவற்றுக்குப் புத்துயிர் கொடுத்துப் போற்றிப் பாதுகாத்தளிக்கும் தமிழ்த்தொண்டர்கள், தமிழைக் காப்பவர்கள், தமிழ்த்தியாகிகள் என்று தான் முன்வந்து இப்பணியைப் புரிவார்களோ அறியேன்.

இலங்கைத் தீவின் கீழ்மாகாணத்தைச் சேர்ந்த நைனாப்பணிக்கன் என்பவரும் வடமாகாணத்தைச் சேர்ந்த வெற்றிவேலன் என்பவரும், காங்கேயப்புலவரும் பாடியுதவிய சிலப்பதிகாரக் கதைகள்- கற்புக்கரசி கண்ணகி தேவியாரைக் கற்புடைத் தெய்வம் என்ற மட்டில் மாத்திரமன்றி அக்கண்ணகி தேவி ஆதிபராசக்தியின் அவதார தோற்றமென்றும் அவன் அதர்மத்தை அழித்துத் தர்மத்தை நிலைநாட்டி சகல சீவராசிகளையும் துட்ட நிக்கிரக சிட்ட பரிபாலனம் செய்து பரிபக்குவப் படுத்திப் பரமபதியாகிய இறைவன் திருவடிகளிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்த்து வீட்டின் மருளும் அருட்சக்தி யாவாளென்றும் விரித்துக் கூறுகின்றன மேலும். வெற்றி புலவர் (வெற்றிவேலன்) பாடியபாடல் "சிலப்பதிகாரக் கதை" இதைச் சிலம்புகூறல் என்றுஞ் கொல்லுவதுண்டு. இப்பாடலை இலங்கையின் வடபகுதியிலுள்ள கண்ணகையம்மன் கோவில்களில் பொங்கல் காலமாகிய விசேட தினங்களில் விரதமாகவிருந்து விளக்கேற்றிய திங்கட்கிழமை தொடக்கம்பொங்கற் பூசைத்தினமாகிய திங்கட்கிழமையீறாகவுள்ள எட்டுத் தினங்களிலும் பக்திசிரத்தையோடு படிப்பவர்கள் படிக்கக் கேட்பவர்களும் சூழலிருந்து செவிப்புலன் வழிப்படுத்தி அதன் கண்ணுள்ள சொற்சுவை, பொருட்சுவை, வருணனைகள், காதல், வீரம், சோகம்,சிருங்காரம், பக்திப்பரவசம் ஆகிய நவரசங்களையும் உணர்ந்து வசமழிந்து அற்புதமெய்தியவர்களாகவும், அதிசயமடைபவர்களாகவும், ஆனந்த பரவசமுற்று மனங்கசிந்துருகிக் கண்ணீர் வடிப்பவர்களாகவும் இருந்து கண்ணகி தேவியாரின் கருணைக் காளாகித் திகழ்வதை நாம் இன்றும் நேரிற் காணலாம்.

இத்தகைய பொற்புகு பாடலாங் கற்பரசியின் கதைகளில் சிலப்பதிகாரக் காப்பியத்திற் காணமுடியாத தெய்வீகத் தன்மைகள் விளங்கும் திவ்யவிச் செய்திகள் பல திகழ்வதைக் கண்ட மலர் வெளியீட்டுக் கழகத்தார் தமியேனை அதன் கண்ணுள்ள சில முக்கியமான பகுதிகளைச் சுருக்கி அவற்றினைத் தொகுத்தளிக்குமாறு கேட்டுக் கொண்ட அவர்கள் கட்டளைக்கமைந்து இதனை எழுத முன்வந்துள்ளேன்.

அறிவாற்றல் மிக்க அருந்தமிழ் வாணர்கள் அடியேனின் தொகுப்புரையில் குற்றங் குறைகளிருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாது குணத்தை மேற்கோள்வரென்ற நம்பிக்கையினாலும் அம்பாளின் அருட்பெருஞ் சரித்திரத்தைச் சொல்வதால் அப்பேறு அடியேனைஅப்பராசக்தியின் அருளிற்றிளைக்க வைக்குமென்ற குறிக்கோளினால் இதனை எழுதுகிறேன்.

**"அம்பாளின் அருள் நோக்கு அருகிருந்துதவுவதாக"**

வணக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி பகிர்கின்றோம்

"தினைத்துணை நன்றி செயினும் -பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரிவர்"

எம்மையெல்லாம் வாழ்வெனும் பெரும் பரப்பில் ஆல்போலத் தழைக்க வைத்து இயற்கையெய்திய அன்புத் தெய்வத்தின் இழப்புச் செய்தியறிந்து வந்து உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் யாவருக்கும் தொலைபேசி, மின்னஞ்சல் வாயிலாக தொடர்பு கொண்டு ஆறுதல் பகிர்ந்து கொண்ட அன்புடை நெஞ்சங்கட்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், பதாதைகள் பதிப்பித்து வெளியிட்டோர்க்கும் இறுதிக் கரண நிகழ்வுகளில் கலந்து கொண்டுதவிய அனைத்து உள்ளங்களுக்கும் நினைவு மலரைஅழகுற பதித்துதவிய வேழன் பதிப்பகத்தாருக்கும் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச வி

*** நல்லதம்பி + * சின்னாச்சி**

* பாக்கியம் + தாமோதரம்பிள்ளை

* சின்னத்துரை + இராசம்மா

* செல்லம்மா + செல்லத்துரை

* சின்னம்மா + நாகரத்தினம்

* செல்லத்துரை + மாணிக்கம் து

* செல்லம்மா + வைத்திலிங்கம்

லலிதாம்பிகை + விக்கினேஸ்வரன்

- மதுஷாலினி
- நிவேதிகா
- சிவானுயன்
- தாரணி

ஜெகதாம்பிகை + சேதுகாவலர்

- மகிஜா

குகதாம்பிகை + கிருஸ்ணலிங்கம்


- பிரவீனா
- அனோச்சனா
- அஸ்வின்
- அரவின்

அம்பி + பேரி

- து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருட்சம்




* அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வற்றாப்பளை அம்பாளின் அற்புதங்கள்

பண்டு பாலர்க்குக் காட்சி கொடுத்ததும்
பழைய வேப்பம் படவாள் தளிர்த்ததும்
வண்டு மேவுப னிச்சைய தாடலும்
வன்பறங் கியைக் காயா வெறிந்ததும்
மொண்ட நீரில் விளக்கை யெரித்ததும்
மோது குட்டரோ கந்தனைத் தீர்த்ததும்
கண்டு பற்றக்கள் ளன்கண் கவர்ந்ததும்
சுருது சிற்பனுக் கேகண்க ளீய்ந்ததும்
அண்டர் போற்றுமுன் னாயிரங் கண்களை
அன்று பிள்ளைகள் காணக்காண் பித்ததும்
விண் டெழுந்திரு வேப்பம ரத்தினால்
மேவு பேய்பிணி யோய்வுறத் தீர்த்ததும்
மண்டு மாமழை தன்னி னைந்துநீ
மடங்க டோன்ற வரமளித் திட்டதும்
கொண்டு நந்திக் கடற்கரை கோயிலாய்
குலவு கண்ணகை யற்புதங் கோடியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேழன் பதிப்பகம் 021 228 5579